**செ.வெ.எண்: 79** **நாள்: 27.08.2016**

# புதுக்கோட்டை மாவட்டத்தில் திருச்சிராப்பள்ளி - மானாமதுரை இருப்புப்பாதையில் உள்ள ஆளில்லா மற்றும் ஆளுள்ள இரயில்வே லெவல் கிராஸிங்கை மூடுவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் திருச்சிராப்பள்ளி - மானாமதுரை இருப்புப்பாதையில் உள்ள ஆளில்லா மற்றும் ஆளுள்ள இரயில்வே லெவல் கிராஸிங்கை மூடுவது தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் 26.08.2016 அன்று தலைமையேற்று துவக்கி வைத்து கூறியதாவது:-

நமது மாவட்டத்தில் செல்லக் கூடிய திருச்சிராப்பள்ளி - மானாமதுரை இருப்புபாதையில் உள்ளஆளில்லா (LC NO:342, 350) மற்றும் ஆளுள்ள (LC NO:343, 360, 361, 369) இரயில்வே லெவல் கிராஸிங்கை மூடுவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இரயில்வே லெவல் கிராஸிங்கை மூடுவது தொடர்பாக ஊராட்சி அளவில் இதற்கு உரிய தீர்மானத்தை நிறைவேற்றி இதன் நகலை மாவட்ட நிர்வாகத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் திருச்சிராப்பள்ளி - மானாமதுரை இருப்புப்பாதையில் உள்ள ஆளில்லா மற்றும் ஆளுள்ள இரயில்வே லெவல் கிராஸிங்கை மூடுவது தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 26.08.2016 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திரு.சந்தோஷ்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சாந்தி,

வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பாஸ்கர், திரு.மதியழகன், வட்டாட்சியர் திருமதி.கிருஷ்ணவேணி, உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**